**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 169/2016**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 17.12.2024 in accordance with the provision of Act 1 of 1873.

Name : ஆண்டி Father's Name : அண்ணாமலை

துவக்க நேரம்: 01.05 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

1) புறம்போக்கு நிலத்தை நான் அனுபவித்து வருவதாகவும், அதற்கான அனுபவத்திற்கான வரி ரசீதுகளை தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றாலும் அதன்படி இவ்வழக்கில் நான் எவ்வித வரி ரசீதுகளையும் தாக்கல் செய்யாமல், தாக்கல் செய்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2) மாதிரி வரைப்படத்தில் (வ.த.சா.ஆ.8) நான் நீல வண்ணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு வண்டிப்பாதை செல்லவில்லை என்றால் சரியல்ல. வண்டிப்பாதை படத்தில் உள்ளது போல்தான் உள்ளது. அதுபோல் வண்டிப்பாதை உள்ளதென நீதிமன்ற ஆணையரை அழைத்துச்சென்று காண்பித்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் வண்டிப்பாதை இருந்துயிருந்தால் நீதிமன்ற ஆணையரை நியமிக்க மனு செய்து நீதிமன்ற ஆணையர் மூலம் வண்டிப்பாதையை அடையாளம் காட்டியிருப்பேன் என்றாலும் அதுபோன்ற வண்டித்தடம் இல்லாததால்தான் நான் வழக்கறிஞர் ஆணையருக்கான மனுவைகூட தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஆனால் எனது வழக்கறிஞரை அழைத்துச்சென்று காண்பித்தேன். அந்த வண்டித்தடத்தில்தான் தற்பொழுதும் சென்று வருகிறோம்.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.169/2016, Dt.17.12.2024.

3) நான் எனது வழக்கறிஞரை அழைத்துச்சென்று வண்டித்தடத்தை காண்பித்தது தவறு என்றாலும், வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் 1 முதல் 4 பிரதிவாதிகள் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும், 5,6 பிரதிவாதிகள் வேறு குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றாலும் சரிதான். நான் எனது வழக்கில் 1 முதல் 6 பிரதிவாதிகள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொய்யான சங்கதிகளை சொல்லி குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் அப்படி சொல்லவில்லை.

4) மாதிரி வரைப்படத்தில், E, F, G, H என்று காட்டப்பட்டுள்ள பகுதியை இந்த வழக்கில் 2-வது அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய வழக்கில் பத்தி 7-ல் E, F, G, H என்று நான் குறிப்பிட்டுள்ள பகுதி, 1-ம் பிரதிவாதி பட்டா நிலத்தில் செல்வதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அது பட்டா நிலம் அல்ல. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் என்னுடைய வழக்கில், " This cart track is also 'Z' in breath and situated adjacent to the patta lands of the first defendant in portion. The cart track E, F, G, H is situated in the western side of the patta lands of Selvam" என்று உள்ளது என்றால் சரிதான்.

ஆவணங்கள் பரிசீலிக்க வேண்டி குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோள் வைக்கப்பட்டது. வேண்டுகோள் ஏற்கப்பட்டு, குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 01.25 P.M.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.169/2016, Dt.17.12.2024.

| |
|---|
| Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct<br><br>sd/-S.Munusamy<br>Principal Distrit Munsif, Attur |

Typed by Selvi. C. Sasikala - O.S. No.169/2016, Dt.17.12.2024.